ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 15/2009 (திருத்தம் III)

எனது இல : ஓதி/சுற்றறிக்கை/2018.
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2018.11. 09

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் / முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்.

**ஓய்வு பெற்ற அரச அலுவலர்களை மீளச் சேவைக்கு அமர்த்தலும் ஓய்வூதிய மீளாய்வும்.**

மேற்படி விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட 2009.08.21 ஆம் திகதிய 15/2009 ஆம் இலக்க, 2011.05.05 ஆம் திகதிய 15/2009 (திருத்தம் I) ஆம் இலக்க மற்றும் 2011.08.05 ஆம் திகதிய 15/2009 (திருத்தம் II) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதிய 2084/59 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைக்கமைவாக 2011.08.05 ஆம் திகதிய 15/2009 (திருத்தம் II) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் இலக்கம் 01 இல் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

1. (அ) 2012, மார்ச்சு 19 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் அல்லது சேவையின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் திருத்தப்படும் போது அவர்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட பணிக்கொடை, அவர்களின் புதிய கொடையில் இருந்து முழுமையாக அறவிடப்படுதல் வேண்டும்.

   (ஆ) 2012, மார்ச்சு 19 ஆந் திகதிக்கு முன்னர் மீளவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் ஓய்வூதியத்தைத் திருத்தும் போது முன்னர் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடைக்கு அமைய செலுத்தப்பட்ட பணிக்கொடையில் இருந்து குறித்த திகதி வரை அறவிடப்பட்ட பணிக்கொடையின் பெறுமதி தவிர எஞ்சிய பணிக்கொடையின் பெறுமதியானது, திருத்தத்தின் பின்னர் உரித்துப் பெறும் பணிக்கொடையிலிருந்து கழிக்கப்பட்டு, தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின் மீளச் செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின் அதனை வழங்குதல் வேண்டும்.

2. ஓய்வு பெற்ற அலுவலர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2018.02.20 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்கச் பொது நிர்வாகச் சுற்றறிக்கை வலுவுக்கு வருவதைத் தொடர்ந்து, முன்னர் வெளியிடப்பட்ட 2007.05.11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கிய பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன. ஆகையால், 2018.02.20 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2018.02.01 ஆம் திகதியில் இருந்து செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

**ஒப்பம்**
**ஏ. ஜகத் டி டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. ஜனாதிபதி செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. செயலாளர் , அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சு – த.த.த
4. செயலாளர். நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு – த.த.த
5. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த